26-05-2024 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 31.12.1999

புதிய நூற்றாண்டில் தனது நடத்தை மற்றும் முகத்தின் மூலம் ஃபரிஸ்தா சொரூபத்தை வெளிப்படுத்துங்கள்.

இன்று பாப்தாதா பரமாத்மாவின் பாலனைக்கு அதிகாரியான தனது குழந்தைகளை பார்த்து புன்முறுவல் செய்து கொண்டிருக்கிறார். சுயம் பரமாத்மாவின் பாலனையில் வளர்ந்துக் கொண்டி ருப்பவர்கள் மிகவும் பாக்கியசாலிகளாக இருக்கிறார்கள். உலகத்தினர் எங்களை பரமாத்மா கவனித்துக் கொண்டிருக்கிறார் என்று சொல்வார்கள், ஆனால் அவர்களை விட விசேஷமான ஆத்மாக்கள் நடைமுறையில் உங்களை பரமாத்மாவே நேரடியாக வளர்த்துக் கொண்டிருக்கிறார். பரமாத்மாவின் பாலனை செய்கிறார், பரமாத்மாவின் ஸ்ரீமத்தாக இருக்கிறது, அவருடைய ஸ்ரீமத் மூலம் நடந்துக் கொண்டிருக்கிறீர்கள், வளர்ந்துக் கொண்டிருக்கிறீர்கள். அதுபோல தன்னை விசேஷ ஆத்மா என்று அனுபவம் செய்கிறீர்களா? தனது மகான் தன்மையை தெரிந்திருக் கிறீர்களா? தற்சமயத்தில் பிராமணர்கள் மகான் ஆத்மாக்களாகத் தான் இருக்கிறார்கள். மேலும் எதிர்காலத்திலும் கூட சர்வ சிரேஷ்ட மகானாக இருக்கிறீர்கள். துவாபர் யுகத்திலும் கூட உங்களுடைய ஜட சித்திரங்களுக்கு முன்பாக யாராவது வந்தாலும் கூட வணங்குமளவிற்கு மகானாக இருக்கிறீர்கள். உங்களுக்கு மிகுந்த மகான் தன்மை இன்றளவும் இருக்கிறது. ஒருவேளை வேறுயாராவது தேவதைகளை போன்று தேவதைகளை போன்று வேடமிட்டு (செயற்கை) கொள்கிறார்கள் லட்சுமி-நாராயணரின் (வேடமிடுவது) சிலையை உருவாக்கு கிறார்கள், ஸ்ரீ இராமரின் (வேடமிடுவது) சிலையை உருவாக்குகிறார்கள், ஆனால் எவ்வளவு நேரம் அவர்கள் தேவதைகளை போன்று நடிப்பை நடிக்கிறார்களோ, இவர்கள் சாதாரண மனித ஆத்மா என்று தெரிந்திருந்தாலும் கூட, தேவதையின் நடிப்பை நடிக்கக்கூடிய அந்த சாதாரண ஆத்மாவையும் வணங்குகிறார்கள். உங்களுடைய ரூபத்திற்கான மகான் தன்மை இருக்கவே தான் செய்கிறது, ஆனால் உங்களுடைய பெயரில் நடிக்கும் ஆத்மாக்களையும் கூட மகானாகவே புரிந்து கொள்கிறார்கள். எனவே அதுபோல தன்னை மகான் ஆத்மாவாக அனுபவம் செய்கிறீர்களா? தெரிந்திருக்கிறீர்கள், புரிந்திருக்கிறீர்கள், ஆனால் இமர்ஜ் ரூபத்தில் (விழிப்புணர்வுடன்) தன்னை அனுபவம் செய்கிறீர்களா? ஏனெனில் முக்கியமான ஆதாரமே - அனுபவம் செய்வது தான்.

பாப்தாதா அனைத்து குழந்தைகளையும் அனுபவ மூர்த்தியாக மாற்றுகிறார். கேட்பவர்களாகவோ, தெரிந்தவர்களாகவோ மட்டும் அல்ல, அனுபவம் என்பது முகம் மற்றும் நடத்தையின் மூலம் தென்பட்டு விடுகிறது. செயல் மூலம் அவர்களின் மனநிலை தெரிந்துவிடுகிறது. எனவே நமது நடத்தை எப்படி இருக்கிறது? என்பதை சிந்தனை செய்யுங்கள். பிராமணர்களின் நடத்தை இருக்கிறதா? பிராமணன் என்றால் சதா சம்மபன்ன (நிறைவான) ஆத்மா. சக்திகளின் மூலம் நிறைந்தவரக இருப்பது, குணங்களின் மூலம் நிறைந்திருப்பது... அப்படிப்பட்ட நடத்தை இருக்கிறதா? இவர்கள் சாதாரணமாக இருந்தாலும் கூட அலௌகீகமாக இருக்கிறார்கள் என்பது நமது நடத்தையின்

மூலம் தென்படுகிறது. நம் அனைவருடைய பார்வை, உள்ளுணர்வு, வைப்ரேஷன் அலௌகீகமாக அனுபவம் செய்கிறீர்களா? கடைசி பிறவி வரை நம்முடைய தெய்வீகத் தன்மை, மகான் தன்மை ஜட சித்திரங்களிலும் கூட அனுபவம் செய்கிறார்கள், என்றால் தற்சமயத்தில் சைதன்ய சிரேஷ்ட ஆத்மாக்களாகிய உங்கள் மூலம் அனுபவம் ஏற்படுகிறதா? ஜட சித்திரம் என்பது உங்களுடையது அல்லவா!

அமிர்தவேளையிலிருந்து ஒவ்வொரு செயலையும் சோதனை செய்யுங்கள் - நம்முடைய பார்வை அலௌகீகமாக இருக்கிறதா? முகத்தின் அமைப்பு சதா புன்முறுவலுடன் இருக்கிறதா? ஒரே இரசனை, அலௌகீகமாக இருக்கிறதா அல்லது நேரத்திற்கு தகுந்தாற் போல் மாறிவிடுகிறதா? யோகத்தில் அமரும்பொழுது, அல்லது ஏதாவது விசேஷமான சேவை செய்யும் நேரத்தில் அலௌகீக நினைவு அல்லது உள்ளுணர்வு இருக்கிறதா அல்லது சாதாரண காரியம் செய்யும் பொழுதும் கூட முகம் மற்றும் நடத்தையில் விசேஷமாக இருக்கிறதா? யார் வேண்டுமானாலும் உங்களை பார்க்கட்டும் - காரியங்களில் மிகவும் பிஸியாக இருக்கிறீர்கள், ஏதாவது குழப்பமான விஷயம் முன்னால் வருகிறாது, ஆனால் உங்களை அலௌகீகமாக புரிந்திருக்கிறீர்களா? எனவே வார்த்தை மற்றும் நடத்தை, முகத்தில், சாதாரண செயலிலும் கூட விடுப்பட்டவராகவும், அன்பானவராகவும் அனுபவம் ஆகிறதா என்பதை சோதனை செய்யுங்கள்? ஏதாவது நேரத்தில் திடீரென்று ஏதோவொரு ஆத்மா உங்கள் முன்னால் வருகிறார் என்றால், உங்கள் வைப்ரேஷன் மூலம் வார்த்தை மற்றும் நடத்தையினால் இவர்கள் அலௌகீக ஃபரிஸ்தா என்று புரிந்திருக்கிறார்களா? ஏனெனில் இன்றைய நாள் சங்கமத்தின் நாளாக இருக்கிறது, பழையவை சென்றுக் கொண்டிருக்கிறது, புதியவை வந்துக் கொண்டிருக்கிறது. எனவே என்ன புதுமை தன்மை உலகத்திற்கு முன்பாக காட்டுவீர்கள்? உள்ளுக்குள் நினைவு இருக்கிறதா அல்லது புரிந்திருக் கிறீர்களா, அந்த விஷயம் தனிப்பட்டதாக இருக்கிறது, ஆனால் ஸ்தாபனையின் நேரத்தை யோசியுங்கள் - எவ்வளவு காலம் ஸ்தாபனைகாக நேரம் கடந்தது. கடந்த போன நேரம் போக மீதம் எவ்வளவு நேரம் மிகவும் குறைவாக இருக்கிறது? எனவே என்ன அனுபவம் ஏற்பட வேண்டும்? மிகவும் நல்ல நல்ல முயற்சியாளர்கள் இருக்கிறார்கள் என்பதை பாப்தாதா தெரிந்திருக்கிறார், முயற்சியும் செய்கிறார்கள், பறந்து விடவும் செய்கிறார்கள், ஆனால் பாப்தாதா இந்த 21 - ம் நூற்றாண்டில் புதுமை தன்மையை பார்க்க விருப்புகிறார். அனைவரும் நல்லவர் களாகவும் இருக்கிறீர்கள், விசேஷமானவர்களாகவும் இருக்கிறீர்கள், மகானாக்வும் இருக்கிறீர்கள், ஆனால் பாபாவை வெளிப்படுத்துவதற்கான ஆதாரம் - சாதாரண செயல் செய்துக் கொண்டி ருந்தாலும் கூட ஃபரிஸ்தாவின் நடத்தை மற்றும் மனநிலை இருக்க வேண்டும். விஷயம் அப்படி இருந்தது, வேலை அந்தமாதிரி இருந்தது, சூழ்நிலை அவ்வாறு இருந்தது, பிரச்சனை வேறு மாதிரியாக இருந்தது, ஆகையால் சாதாரணமானதாக ஆகிவிட்டது என்பதை பாப்தாதா பார்க்க விரும்பவில்லை. ஃபரிஸ்தா சொரூபம் என்றால் நினைவு சொரூபம் சாகார சொரூபத்தில் இருப்ப தாகும். அப்படிபட்ட மாற்றம் எப்படிப்பட்ட நேரமாக இருந்தாலும் சரி, சூழ்நிலையிலும் அலௌகீக மாக அனுபவம் ஏற்படும். அவ்வாறு இருக்கிறதா அல்லது சிறிது வேறுபடுகிறதா? எப்படிப்பட்ட பிரச்சனையோ, அப்படி சொரூபத்தை மாற்றிக்கொள்ளாதீர்கள். விஷயங்கள் உங்களை ஏன் மாற்ற வேண்டும், நீங்கள் விஷயத்தை மாற்ற

வேண்டும். பேச்சு உங்களை மாற்றுமா? அல்லது நீங்கள் பேச்சை மாற்ற வேண்டுமா? மாற்றம் என்று எதை சொல்லப்படுகிறது? நடைமுறை வாழ்க்கையின் உதாரணமாக யாரை சொல்லப் படுகிறது? எப்படி நேரமோ, எப்படி சூழ்நிலையோ, அப்படி சொரூபம் ஆவது - இது சாதாரணமானவர்களுக்கும் ஏற்படுகிறது. ஆனால் ஃபரிஸ்தா என்றால் பழைய மற்றும் சாதாரண நடவடிக்கையில் இருந்து விடுபட்டு இருப்பது.

இப்பொழுது உங்களுடைய தலைப்பு என்னவாக இருக்கிறது - காலத்தின் அழைப்பு. எனவே இந்த காலத்தின் அழைப்பு என்பது விசேஷ ஆத்மாக்களாகிய உங்களுக்காக அதாவது ஃபரிஸ்தா என்றால் அலௌகீக வாழ்க்கையின் சொரூபத்தில் தென்பட வேண்டும், என்ன இது செய்ய முடியுமா? டீச்சர்ஸ் சொல்லுங்கள். முடியுமா? எப்பொழுது நடக்கும்? முடியும் என்று சொன்னது மிக நல்ல விஷயம் தான். எப்பொழுது நடக்கும்? ஒரு வருடம் போதுமா, 2000 - ம் வருடத்தில் செய்து முடித்து விடுவீர்களா? ஒரு வருடம் வேண்டாம், அல்லது 6 மாதம் , 6 மாதம் அல்ல, 3 மாதம் வேண்டுமா? இதற்கு கைகளை உயர்த்தவில்லை? உங்களுடைய சுலோகன் என்ன? நினைவு இருக்கிறதா? இப்பொழுது இல்லையென்றால் எப்பொழுதும் இல்லை. இது யாருடைய சுலோகன்? பிராமணர்களுடையதா? அல்லது தேவதைகளுடையதா? பிராமணர்களுடையது தான் அல்லவா. எனவே என்ன நடந்தாலும் சரி, அலௌகீகத் தன்மை போய் விடக்கூடாது, இது தான் புது நூற்றாண்டில் பாப்தாதாவின் பார்க்க விரும்புகிறார். இதற்காக நான்கு வார்த்தைகளில் கவனம் வைக்க வேண்டியிருக்கிறது, அது என்ன? அந்த விஷயம் புதியதல்ல, ஏற்கனவே கேட்டவை தான், ரிவைஸ் செய்துக் கொண்டிருக்கிறார்.

ஒரு விஷயம் - நல்ல சிந்தனை செய்வது, இரண்டாவது - நல்ல எண்ணங்கள், மூன்றாவது - நல்ல உணர்வுகள். இவர்கள் மாறினால் நான் மாறுவேன் என்ற உணர்வு அல்ல. மற்றவர்களுக்காகவும் சுபபாவணை, தன் மீதும் சுப பாவணை, மேலும் நான்காவதாக - நல்ல சிரேஷ்ட நினைவு மற்றும் சொரூபம். ஒரே ஒரு நல்லது என்ற வார்த்தையை எடுத்துக் கொள்ளுங்கள், இதில் 4 விஷயங் களும் வந்துவிடும் நாம் அனைத்து விஷயங்களிலும் நல்ல (சுப) என்ற வார்த்தையை நினைவில் வைக்க வேண்டும். இதை பல முறை சொல்லவும் செய்திருக்கிறோம், கேட்கவும் செய்திருக் கிறோம். இப்பொழுது இதை சொரூபத்தில் கொண்டு வருவதற்கான கவனம் வைக்க வேண்டும். நாம் ஆக வேண்டும் என்பதை பாப்தாதா தெரிந்திருக்கிறார். மேலும் வரக்கூடியவர்களும் கூட சாகார ரூபத்தில் நம்மை தான் பார்க்கிறார்கள்.

இன்று வருடத்தின் கடைசி நாளாக இருக்கிறது அல்லவா. எனவே பாப்தாதா நிறைய குழந்தைகளின் ஆண்டின் இறுதி கணக்கை பார்த்தார். என்ன பார்த்து இருப்பார்? முக்கியமாக ஒரு காரணத்தை பார்த்தார். கழித்தல் மற்றும் இணைக்கும் கணக்கை பாப்தாதா பார்த்தார். நீக்குகிறார் கள் (கழித்தல்), தலைகீழாக பார்ப்பது, கேட்பது, சிந்திப்பது, நடந்து முடிந்ததையும் நீக்குகிறார்கள், ஆனால் நீங்கள் சொல்வீர்கள் அல்லவா ஒன்று (கான்சியஸ்) - மேல் மனம், இரண்டாவது - உள்மனம் (சப்கான்சியஸ்). நீக்கிவிடுகிறீர்கள், ஆனால் மனதை பிளேட் எனலாம், ஸ்லேட் என்றும் சொல்லாம், காகிதம் எனலாம், எப்படி வேண்டுமென்றாலும் சொல்லாம், முழுமையாக

நீக்குவதில்லை. ஏன் நீக்க முடிவதில்லை? அதற்கான காரணம் என்ன? உள்ளடக்கும் சக்தி சக்தி சாலியாக இல்லை. நேரத்திற்கு தகுந்தாற்போல் உள்ளடக்கவும் செய்கிறீர்கள், ஆனால் பிறகு அதை வெளிப்படுத்தவும் செய்து விடுகிறீர்கள். ஆகையால் நான்கு வார்த்தைகளை பாப்தாதா சொல்லி இருக்கிறார், அது எப்பொழுதும் (சதா) இருப்பதில்லை. ஒருவேளை மனம் என்ற காகிதம் அல்லது பலகையை முழுமையாக சுத்தம் செய்யவில்லை, முழுமையாக நீக்கவில்லை என்றால் ஒருவேளை அதில் நீங்கள் மிக நன்றாக எழுத வேண்டும் என்று விரும்புகிறீர்கள் என்றால் அது தெளிவாக இருக்குமா? அதாவது அனைத்து குணங்கள், சர்வ சக்திகள் தாரணை செய்ய விரும்புகிறீர்கள் என்றால் எப்பொழுதும் மற்றும் முழுமையாக சதவீகிதத்தில் இருக்குமா? முற்றிலும் தெளிவாகவும் இருக்க வேண்டும், சுத்தமாகவும் இருக்கும் பொழுது தான் சக்திகள் எளிதாக செயலில் பயன் படுத்த முடியும். இது தான் காரணமாக இருக்கிறது, அநேகருடைய பலகை தெளிவாகவும், சுத்தமாகவும் இருப்பதில்லை. கொஞ்சம் கொஞ்சம் நடந்து முடிந்த விஷயங்கள், நடந்து முடிந்த செயல்கள், வீணான விஷயங்கள் மற்றும் வீணான நடவடிக்கை சூட்சம ரூபத்தில் உள்ளுக்குள் இருப்பதால் அது ஒரு கால கட்டத்தில் சாகார ரூபத்தில் வந்து விடுகிறது. நேரத்திற்கு முன்னதாகவே சோதனை செய்யுங்கள், தன்னை சோதனை செய்யுங்கள், மற்றவர்களை சோதனை செய்வதில் ஈடுபட வேண்டாம். ஏனெனில் மற்றவர்களை சோதனை செய்வது எளிதாக இருக்கிறது. தன்னை சோதனை செய்வது தான் கடினமாக இருக்கிறது. என்னுடைய மனம் என்ற பலகையில் வீணானவை மற்றும் நடந்து முடிந்த விஷயங்களை சுத்தம் செய்து விட்டோமா என்று சோதனை செய்ய வேண்டும்? அனைத்தையும் விட சூட்சம ரூபமாக இருப்பது - வைப்ரேஷன் ரூபத்தில் இருந்து விடுகிறது. ஃபரிஸ்தா என்றால் முற்றிலும் தெளிவாகவும் சுத்தமாகவும் இருப்பது. எதிர்நோக்கும் சக்தியின் மூலம் எதிர்மறையானதை நேர்மறையானதாக மாற்றம் செய்து உள்ளடக்கிக் கொள்ளுங்கள். எதிர்மறையாகவே உள்ளே வைத்துக் கொள்ளாதீர்கள். நேர்மறையாக மாற்றம் செய்து உள்ளடக்கும் பொழுது தான் புதிய நூற்றாண்டில் புதுமை தன்மை வரும்.

இரண்டாவது என்ன பார்த்தேன் என்று சொல்லட்டமா? சொல்லட்டுமா அல்லது மருந்து அதிகமாகி விடுமா? எப்படியாவது நான் உங்களை என்னுடன் கூடவே பரந்தாமத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும், அடித்தாலும் சரி அல்லது அன்பாக அழைத்துச் செல்வேன் என்று பாப்தாதா முன்னதாகவே சொல்லியிருந்தோம். அஞ்ஞானிகளுக்கு தண்டணை கொடுத்தும், குழந்தைகளாகிய உங்களை அன்போடு அழைத்து செல்கிறார். அதுபோலவே ஏதாவது செய்தாவது உலகத்திற்கு முன்னால் மகான் ஆத்மாக்களை ஃபரிஸ்தா சொரூபத்தில் வெளிப்படுத்தியே ஆக வேண்டும் என்று பாப்தாதா இப்பொழுதும் சொல்கிறார், எனவே தயாராக இருக்க்கிறீர்களா? பாப்தாதா சொல்லி யிருந்தார் அல்லவா - ஏதாவது செய்து (ஃபரிஸ்தா) ஆகியே தீர வேண்டும். இல்லையென்றால் புது உலகம் எப்படி வரும்? நல்லது - அடுத்ததாக எந்த விஷயம் பார்த்தார்?

இறுதியின் கடைசி நாள் அல்லவா! பார்த்தார், பாப்தாதா அநேகர் என்ற வார்த்தையை சொல்லிக் கொண்டியிருக்கிறார். அனைவரும் என்று சொல்லவில்லை, அநேகர் என்று தான் சொல்கிறார். எனவே அடுத்த விஷயம்

பார்த்தார்? ஏனெனில் காரணத்தை நிவாரணம் செய்யும் பொழுது நவ - நிர்மாண் (புதிய கட்டுமானம்) செய்ய வேண்டும். எனவே காரணம் - அலட்சியத்தன்மையின் வித விதமான ரூபத்தில் பார்த்தார். ஒரு சிலரிடத்தில் மிகவும் இராயல் ரூபத்தில் அலட்சயத்தன்மைய பார்த்தார். ஒரே வார்த்தை அலட்சியத் தன்மையின் காரணம் - அனைத்தும் நடைபெறுகிறது. ஏனெனில் சாகாரத்தில் என்றால் ஒவ்வொருவரின் ஒவ்வொரு செயலையும் யாரும் பார்ப்ப தில்லை. சாகார பிரம்மாவை கூட ஸ்துலத்தில் பார்க்கவில்லை. ஆனால் இப்பொழுது அவ்யக்த ரூபத்தில் ஒருவேளை பார்க்க விரும்புகிறீர்கள் என்றால் எவர் மூலமாவது ஒவ்வொரு செயலை யும் பார்க்க முடியும். பரமாத்மாவிற்கு ஆயிரம் கண்கள் இருக்கின்றன, இலட்சம் கண்கள் இருக்கின்றன. இலட்சம் காதுகள் இருக்கின்றன என்று பாடப்படுகிறது. இப்பொழுது அவற்றை நிராக்கார் மற்றும் அவ்யக்த பிரம்மா இருவரையும் ஒன்றிணைந்து பார்க்க முடியும். எவ்வளவு தான் மறைத்தாலும், மறைப்பதும் கூட இராயல் ரூபத்தில், சாதாரணமாக இல்லை. எனவே அலட்சியம் என்பது ஒன்று வெளிப்படையாகவும், மற்றொன்று மறைமுகமாகவும் இருக்கிறது. இரண்டிற்குமான ஒரே வார்த்தை - நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. என்ன நடக்கிரது என்று பார்த்தாகி விட்டது, ஒன்றும் நடைபெறுவதில்லை. இப்பொழுது நடப்பது நடக்கட்டும். பிறகு பார்த்துக் கொள்ளலாம். இது தான் அலட்சியத்தன்மையின் எண்ணம். பாப்தாதா நினைத்தால் அனைத்தையும் சொல்ல முடியும், ஆனால் கொஞ்சம் மரியாதை வைக்க வேண்டும் என்று நீங்கள் சொல்கிறீர்கள் அல்லவா. எனவே பாப்தாதா மரியாதை வைக்கிறார் , ஆனால் இந்த அலட்சியம் முயற்சியை வேகப்படுத்தாது. பாஸ் வித் ஆனர் ஆக்க விடாது. எப்படி தனக்குள் யோசிக்கிறீர்கள் அல்லவா - அனைத்தும் நடந்துக் கொண்டிருக்கிறது. அதனால் ரிசல்ட்டிலும் நடந்து போய்விடும் அதாவது பறந்துவிடும். எனவே எந்த இரண்டு விஷயத்தை பார்த்தார். மாற்றத்தில் ஏதாவது ஒரு ரூபத்தில் ஒவ்வொருவரிடமும் தனிப்பட்ட ரூபத்தில் அலட்சியத்தன்மை இருந்துவிடுகிறது. எனவே பாப்தாதா அந்த நேரத்தில் புன்முறுவல் செய்கிறார். குழந்தைகள் சொல்கிறார்கள் - பார்க்கலாம் என்ன தான் நடகிறது என்று? எனவே இன்று பாப்தாதா ஏன் சொல்லிக் கொண்டிருக்கிறார்? ஏனெனில் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் வலுகட்டாயமாக நீங்கள் ஆகியே தீர வேண்டும், மேலும் உங்களை ஆக்க வேண்டியிருக்கிறது. இன்று கொஞ்சம் கடினமாகத் தான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஏனெனில் நீங்கள் திட்டங்களை உருவாக்குக்கிறீர்கள், இது செய்யலாம், இதை செய்வோம்.....ஆனால் காரணத்திற்கான நிவாரணம் கொடுக்க வில்லை யென்றால், அது தற்காலிகம் ஆகிவிடும். அதன் பிறகு ஏதாவது விஷயம் வந்தது என்றால் விஷயமே அப்படித் தான் என்று சொல்லி விடுவீர்கள். காரணமே அப்படி தான் இருந்தது. என்னுடைய கணக்கு வழக்கே அப்படி தான். ஆகையால் ஆக வேண்டியிருக்கிறது. ஏற்றுக் கொள்கிறீர்கள் அல்லவா. டீச்சர்ஸ் ஏற்றுக்கொள்கிறீர்களா? அயல்நாட்டினர் ஏற்றுக் கொள்கின்றீர் களா? பாப்தாதா சொல்கிறார் - ஆகியே தீர வேண்டும். பிறகு புதிய நூற்றாண்டில் ஆகிவிட்டோம் என்று சொல்வீர்கள். அப்படி தான் அல்லவா. குறைந்ததிலும் குறைந்த நேரத்தை எடுத்தக் கொள்ள வேண்டும். ஆனால் பாப்தாதா ஒரு வருடம் கொடுத்திருக்கிறார். பிறகு எளிதாகிவிடும். ஓய்வாக (பாபா நினைவில்) செய்யுங்கள். ஆராமின் (ஓய்வு) பொருள் - ஆ ராம் (வா ராம்) அதாவது பாபாவை நினைவு செய்த பிறகு செய்ய வேண்டும். டன்லப் (ஒரு வித

சொகுசு மெத்தை) போன்ற ஒய்வு அல்ல. பாப்தாதாவிற்கு உங்களிடம் அதிகமான அன்பு இருக்கிறதா, அல்லது உங்களுக்கு அவரிடம் அதிகப்படியான அன்பு இருக்கிறதா? யாருக்கு அதிகமாக இருக்கிறது? பாபாவிற்கா அல்லது உங்களுக்கா?

குழந்தைகளாகிய நீங்கள் அனைவரும் அன்பிற்கான பிரதிபலனாக அவ்யக்த பிரம்மா பாபாவை போன்று அவசியம் ஆவீர்கள் என்று உங்கள் அனைவர் மீது பாப்தாதாவிற்கு மிகுந்த நம்பிக்கை இருக்கிறது. ஆவீர்கள் அல்லவா. பாப்தாதாவும் விட போவதில்லை. அன்பு இருக்கிறதல்லவா. யாரிடம் அன்பு இருக்கிறதோ, அவர்களை தனியாக விடுவதில்லை. எனவே பிரம்மா பாபாவிற்கு உங்களிடத்தில் மிகுதியான அன்பு இருக்கிறது. எப்பொழுது என்னுடைய குழந்தைகள் வருவார்கள் என காத்துக் கொண்டிருக்கிறார். எனவே சமமாக ஆகிவிடுவீர்கள் அல்லவா.

பிரம்மா பாபா ஒரு ஆன்மீக உரையாடலை சொல்கிறார். 18 ஜனவரி வர போகிறது அல்லவா. எனவே பிரம்மா பாபா, சிவபாபாவிடம் சொல்கிறார் -நீங்கள் குழந்தைகளின் ஒரு தேதியை நிர்ணயம் செய்யுங்கள், எவ்வளவு நாள் நானும் காத்துக் கொண்டிருப்பது? ஒரு தேதியை குறியுங் கள். அதற்கு சிவபாபா என்ன சொல்வார்? புன்முறுவல் செய்கிறார். பாப்தாதா திரும்பவும் சொல் கிறார் - குழந்தைகள் தான் தேதியை நிர்ணயம் செய்ய வேண்டும். பாப்தாதா செய்யமாட்டார். அதனால் பிரம்மா பாபா மிகுந்த நினைவு செய்கிறார். எனவே தேதியை நிர்ணயம் செய்வீர்களா?

புது வருடத்தில் சமமாவதற்கான (பாப்சமான்) உறுதியான எண்ணங்களை கொண்டு வாருங்கள். நாம் ஃபரிஸ்தா ஆக வேண்டுமென்று இலட்சியம் வையுங்கள். இப்பொழுது பழைய விஷயங்களை முடித்து விடுங்கள். தனது அனாதி மற்றும் ஆதி சம்ஸ்காரங்களை இமர்ஜ் செய்யுங்கள். நினைவில் வையுங்கள் - நடந்தாலும், சுற்றினாலும் நான் பாபாவிற்கு சமமான ஃபரிஸ்தா, எனக்கு பழைய சம்ஸ்காரங்கள், பழைய விஷயங்களில் எந்தவிதமான தொடர்பும் இல்லை. புரிந்ததா. இந்த மாற்றத்திற்கான எண்ணத்திற்கு தண்ணீரை ஊற்றுங்கள். எப்படி விதைக்கு தண்ணீரும் வேண்டும், சூரிய ஒளியும் வேண்டும், அப்பொழுது தான் பழம் கொடுக்கும். எனவே இந்த எண்ணங்களுக்கு விதைக்கு நினைவு என்ற தண்ணீர் மற்றும் சூரிய ஒளியை கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். அடிக்கடி ரிவைஸ் செய்யுங்கள்- நான் பாப்தாதாவிடம் என்ன உறுதிமொழி செய்தேன். நல்லது

நாலா பக்கத்திலுமுள்ள மகான் ஆத்மாக்களுக்கு சதா மாற்றத்திற்கான சக்தியை ஒவ்வொரு நேரமும் காரியத்தில் பயன்படுத்தக்கூடிய, உலகத்தை மாற்றம் செய்யக் கூடிய ஆத்மாக்களுக்கு, சதா உறுதியான நம்பிக்கையின் மூலம் பிரத்யக்ஷ் சொரூபத்தை காட்டக்கூடிய பிராமண நிலையிலிருந்து ஃபரிஸ்தா நிலையை அடையும் ஆத்மாக்களுக்கு சதா ஒரு பாபாவை தவிர வேறு யாருமில்லை, பாபாவிற்கு சமமாக ஆகக்கூடியவர்களுக்கு பாப்தாதாவின் அன்பிற்கு கைமாறுகொடுக்கக்கூடிய ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

நாலாபக்கத்திலுமுள்ள குழந்தைகளுக்கு புது வருடத்தின், புது யுகத்தின், புது

வாழ்க்கையின் வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள். இந்த புது வருடத்தில் பிரம்மா பாபாவின் மூலம் உச்சரிக்கப்பட்ட மகா வாக்கியங்கள் சதா நினைவில் வைக்க வேண்டும் - நிராக்காரி, நிர் அகங்காரத்துடன் கூடவே புதியதை உருவாக்கக் கூடிய. சதா பணிவாக மற்றும் புதுயுகத்தின் காரியத்தில் சமநிலை வைத்து பறந்துக் கொண்டே இருக்க வேண்டும். இந்த வருடத்தில் விசேஷ மாக சுய மாற்றத்தின் விசேஷத்தன்மையை முன்னால் வைத்து பறக்கவும் மற்றவர்களை பறக்க வைத்துக் கொண்டே இருக்க வேண்டும். சதா பிரம்மா பாபாவை ஒவ்வொரு அடியிலும் பின்பற்றிக் கொண்டே இருக்க வேண்டும். அதனால் வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், கோடான கோடி வாழ்த்துக் கள். நல்லது.

வரதானம் : சுயத்தின் சக்கரத்தை தெரிந்துக்கொண்டு ஞானம் நிறைந்த ஆத்மா ஆகக்கூடிய பிரபுவிற்கு பிரியமானவர் ஆகுக.

ஆத்மாவிற்கு இந்த சிருஷ்டி சக்கரத்தில் என்னென்ன நடிப்பு இருக்கிறது, அதை தெரிந்துக் கொள்வது அதாவது சுய தர்ஷன சக்கரதாரி ஆவது. முழுமையான சக்கரத்தின் ஞானத்தை புத்தியில் சரியான முறையில் தாரணை செய்வது தான் சுயதர்ஷன சக்கரத்தை சுற்றுவது, சுயத்தின் சக்கரத்தை தெரிந்துக் கொள்வது என்றால் ஞானம் நிறைந்த ஆத்மா ஆவதாகும். அப்படிப்பட்ட ஞானம் நிறைந்த ஆத்மா தான் பிரபுவிற்கு பிரியமானவராக இருப்பது. அவர்களுக்கு முன்பு மாயா நிலைத்திருக்க முடியாது. இந்த சுயதர்ஷன சக்கரம் தான் எதிர்காலத்தில் சக்கரவர்த்தி இராஜா ஆக்குகிறது.

சுலோகன்: ஒவ்வொரு குழந்தையும் பாபாவிற்கு சமமாக பிரத்யக்ஷம் ஆகிவிட்டால் பிரஜைகள் விரைவாக உருவாகிவிடுவார்கள்.